# ஆகஸ்ட் - 06 - பொதுக்கால 18ம் வார ஞாயிறு

## ஆண்டவரின் உருமாற்றத் திருவிழா

### “வானங்கள் அவரது நீதியை அறிவிக்கின்றன” திபா - 97: 6

### முதல் வாசகம்: தானியேல்7: 9 – 10,13 – 14

நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப்பட்டன. தொன்மை வாய்ந்தவர் அங்கு அமர்ந்தார் அவருடைய ஆடை வெண்பனி போலவும், அவரது தலைமுடி தூய பஞ்சு போலவும் இருந்தன் அவருடைய அரியணை தீக்கொழுந்துகளாயும் அதன் சக்கரங்கள் எரி நெருப்பாயும் இருந்தன.அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாலான ஓடை தோன்றிப் பாய்ந்தோடி வந்தது பல்லாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள். பலகோடி பேர் அவர்முன் நின்றார்கள் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க அமர்ந்தது நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. இரவில் நான் கண்ட காட்சியாவது: வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார் இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர் வந்தார் அவர் திருமுன் கொண்டு வரப்பட்டார்.ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்கு கொடுக்கப்பட்டன் எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும் அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும் அதற்கு முடிவே இராது அவரது அரசு அழிந்து போகாது.

**பதில்பாடல் :** உலகனைத்தையும் ஆளும் உன்னதராம் கடவுள் ஆட்சி செய்கின்றார்.

### இரண்டாம் வாசகம் : 2பேதுரு 1 : 16 – 19

சகோதர சகோதரிகளே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் பற்றி நாங்கள் உங்களுக்குத் தெரிவித்தபோது சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை ஆதாரமாகக் கொண்டு பேசவில்லை. நாங்கள் அவரது மாண்பை நேரில் கண்டவர்கள்.”என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று மாட்சிமிகு விண்ணகத்திலிருந்து அவரைப்பற்றிய குரல் ஒலித்தபோது, தந்தையாகிய கடவுளிடமிருந்து மதிப்பும் மாட்சியும் பெற்றார். தூய மலையில் அவரோடு இருந்தபோது விண்ணிலிருந்து வந்த இக்குரலொளியை நாங்களே கேட்டோம்.எனவே, இறைவாக்கினர் கூறியது இன்னும் உறுதியாயிற்று. அவர்கள் கூறியதை நீங்கள் கருத்திற்கொள்வது நல்லது ஏனெனில் பொழுது புலர்ந்து விடிவெள்ளி உங்கள் இதயங்களில் தோன்றும்வரை அது இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கைப் போன்றது.

### நற்செய்தி : மத்தேயு 17 : 1 – 9

ஆறு நாள்களுக்குப் பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின. இதோ! மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன்தோன்றி இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, ”ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?” என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று, ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. அதைக் கேட்டதும் சீடர்கள் மிகவும் அஞ்சி முகங்குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களிடம் வந்து அவர்களைத் தொட்டு, ”எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்” என்றார். அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது இயேசு ஒருவரைத்தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கிவந்தபோது இயேசு, ”மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும்வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக் கூடாது” என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

**தியானம்:** மத்தேயு நற்செய்தி (17: 1-9) யை நாம் ஆழமாக நோக்குமிடத்து, இயேசுவைப் பின்தொடர்ந்த பல சீடர்கள் இருந்தாலும், பன்னிருவரைத் தன்னோடிருக்கத் தேர்ந்தெடுத்து அதிலும் மூன்று பேரைத் தனது பணிவாழ்வில், முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்வதால், அந்த மூன்று சீடர்களின் மீது இயேசுவுக்கு இவ்வளவு நம்பிக்கையா? இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூன்று பேரைத் தன்னோடு முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்றது, அத்திருச்சீடர்கள் பாவமே செய்யாதவர்கள் என்பதால் அல்ல அச்சீடர்களும் பலவீனர்கள். பேதுரு, இயேசுவை மறுதலிக்கிறார். யாக்கோபு மற்றும் யோவான் அதிகாரத்தில் இருப்பதற்குப் பரிந்துரைப்பிக்கிறார்கள். எனினும், இயேசுவை முழுமையாக, அன்பு செய்தார்கள். இவ்வாறான பரிபூரண அன்பை இயேசு எம்மிடம் எதிர்பார்க்கவில்லையா? மூன்று சீடர்கள் இயேசுவின் மீது வைத்திருந்த உண்மையான அன்பு அவர்களை இயேசுவின் பார்வையில் மிகவும் உயர்ந்த இடத்திற்கு, அதாவது தாபோர் மலையின் உச்சிக்குக் கொண்டு சென்றது. நாங்களும் ஆண்டவர் இயேசுவை உண்மையான இரட்சகரும், மீட்பருமென அறிக்கை செய்து நம்பிக்கையோடு வாழ்வோம். தாபோர் மலை மீது சீடர்கள் மூவருக்குக் கிடைத்த உருமாற்றத்தின் மனமாற்ற அனுபவம் எமக்கும் வழங்கப்படும். இந்த உருமாற்றத்தின் மனமாற்ற அனுபவம் உடனடியாக இல்லாவிட்டாலும், இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் சீடர்களின் இறைநம்பிக்கையை ஆழப்படுத்தியது. இயேசு இறைமகனாய், மாட்சிமை நிறைந்தவராய் இருந்தும் கூட, இறைத் திருவுளத்துக்குப் பணிந்து அனைத்தையும் துறந்து, எளியவராய் வாழ்ந்தார் என்னும் உண்மையை சீடர்கள் எத்தனையோ நாள்கள் எண்ணி, எண்ணி வியந்திருப்பர். தமது பணியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பர். எனினும் நாம் எம்மாத்திரம்? நாம்தான் எல்லாம் தெரிந்த மேதாவிகளாயிற்றே? உருமாற்றம் பெற மன மாற்றம் அடைவோமா?